ஆகிய 3 மாவட்டங்களில் இந்தப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு முழுவதிலிருந்து அங்கே ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். அங்கே ஆசிரியர்களாக வந்தவர்கள் ஓராண்டுக்குள்ளாகப் பணி மாறுதல் வாங்கிக் கொள்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் நிறைய ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதைத் தவிர்க்கின்ற வகையில், தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய 3 மாவட்டங்களில் இருக்கின்ற ஆசிரியர்களை, அந்தப் பள்ளிகளிலேயே நிரந்தரமாகப் பணி நியமனம் செய்து இந்தக் குறையைப்போக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டு காலமாக இது தொடர்ந்து நடந்து வருகிற பிரச்சினை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இந்தக் குறையைத் தீர்த்து வைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவின்படி, அந்த இடத்தை ஆய்வு செய்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் கோட்டாறு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில், 1965 ஆம் ஆண்டு இந்திய வைத்திய முறைகளில் முன்னோடியாக விளங்குகின்ற சித்த வைத்தியத்தைப் பிரபலப்படுத்த*

2012 ஏப்ரல் 25] *[டாக்டர் க. கிருஷ்ணசாமி]*

வேண்டுமென்ற நோக்கத்தோடு, சித்த மருத்துவக் கல்லூரி துவங்கப்பட்டிருக்கிறது. பழமைவாய்ந்த அந்த சித்த மருத்துவக் கல்லூரியில் மாணவர்களை அனுமதிப்பதற்கு கடந்த 2010–2011 ஆம் ஆண்டில், AYUSH என்ற நிறுவனம் அனுமதிக்காததன் விளைவாக மாணவர்கள் ஏற்கெனவே போராட்டம் நடத்தினார்கள். இப்பொழுது உயர் நீதிமன்றத்தினுடைய ஆணையின்பேரில், அந்த மருத்துவக் கல்லூரி தற்காலிகமாகத் திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரியின் திறப்பு தற்காலிமானதா, இல்லை அந்தக் கல்லூரியை நிரந்தரமாக நடத்துவதற்குண்டான AYUSH நிறுவனத்தின் அனுமதியை இந்த அரசு பெற்றுவிட்டதா என்பதைக் கேட்டு நான் இந்தப் பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், கோட்டாறு சித்த மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட்டது. அந்தக் கல்லூரியை இயக்குவதற்கான எந்த நடவடிக்கையையும் முந்தைய தி.மு.க. அரசாங்கம் எடுக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், இந்தக் கல்லூரியைச் சீர்படுத்தி, முறையாக நடத்திட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள்.*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.*